நாள் - 25.04.2023

**STC. No.**347/2017

ம.சா.2- ஜெயபிரபா, க/பெ. உண்ணி.

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act**, 1969 (**Central Act** 44 **of** 1969) **on the** 25**th day of April** 2023.

குறுக்கு விசாரணை

1. என் கணவரின் பிரதான தொழில் மார்க்கெட்டிங் ஆகும். கேட்டரிங் அவருடைய தொழில் அல்ல என்றால் சரிதான். அவருடைய தொழில் சம்பந்தமாக நான் கணவருடன் கலந்து பேசுவேனா என்றால் ஆமாம். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். என்னுடைய கணவர் கூறியதன் பெயரில் தான் எனக்கு தெரியும்.

2. தொலைபேசியின் வாயிலாக தான் முதன்முதலாக சம்பவம் குறித்து கூறினார். மேலும் காவல் நிலையம் சென்று கொண்டிருப்பதாக கூறினாரா என்றால் சரிதான். ஹங்கர்ஸ் என்ற நிறுவனம் பதிவு செய்யப்பட்ட நிறுவனமா என்றால் பதிவு செய்யப்படவில்லை. அந்நிறுவனம் பங்குதாரர் நிறுவனமாகும். என்னுடைய கணவரும் எதிரியின் மனைவி புவனேஸ்வரியும் அந்நிறுவனத்தின் பங்குதாரர்கள் ஆவார்.

3. பங்குதாரர் ஒப்பந்தம் ஏதாவது ஏற்படுத்தியுள்ளீர்களா என்றால் ஏற்படுத்தவில்லை. ஜான்சன் கல்லூரியில் கேண்டீன் ஒப்பந்தம் எடுத்தற்கு கல்லூரி நிர்வாகத்தினர் அனுமதி வழங்கினார்களா என்றால் வழங்கவில்லை. வாய்மொழியாக ஏற்படுத்தி கொண்டவையாகும். கல்லூரிக்குள் கணவரை விடவில்லை லஎன்று கூறி கல்லூரிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தாரா என்றால் ஆமாம்.

4. டெக்ஸ்டர் எங்களுடைய குடும்ப நண்பர் ஆவார். முகமது ரபி என்பவர் ஆட்டோ ஓட்டுநர். சோபியா அவருடைய மனைவியாவார். என்னுடைய கணவர் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு குறித்த விபரங்கள் எனக்கு தெரியும் என்றால் சரிதான். மேற்படி மூவரும் சம்பவ சமயத்தில் இருந்தார்கள் என்று குறிப்பிடவில்லை என்றால் அது எனக்கு தெரியாது.

5. என்னுடைய முதல் விசாரணையில் கணவர் காவல் நிலையத்திற்கு சென்றார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னுடைய கணவரை ஆட்டோவில் ஏற்றி சென்ற மருத்துவமனையின் பெயர் எனக்கு தெரியாது. அவ்வாறு சிகிச்சை பெற்றதற்காக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது எனக்கு தெரியவில்லை. சிகிச்சை எடுத்தற்கான மருந்து சீட்டு உள்ளது.

6. காவல் நிலையத்திற்கு சென்ற பின்னர் தான் மருத்துவமனைக்கு சென்றார். வழக்கு சம்பவம் குறித்து டெக்ஸ்டர், ரபி, சோபி ஆகியோர் எதுவும் கூறவில்லை என்றால் கூறினார்கள். டெக்ஸ்டர் போத்தனூரில் உள்ள கடைவீதியில் வசித்து வருகிறார். சரியான முகவரி எனக்கு தெரியாது. அவர் என்ன தொழில் செய்கிறார் என்றால் குறிப்பாக எந்த தொழிலும் செய்யவில்லை. சும்மா தான் உள்ளார். ரபி தற்பொழுது எங்கு உள்ளார் என்று சரியாக எனக்கு தெரியாது.

7. நான் முதல் விசாரணையில் சாட்சியம் அளித்திருப்பது போன்று வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய கணவரின் நடவடிக்கையின் காரணமாக தான் ஜான்சன் கல்லூரியிலிருந்து அவர் வெளியேற்றப்பட்டார் என்றால் சரியல்ல. அதனை தொடர்ந்து எதிரி மற்றும் அவருடைய மனைவியும் அக்கல்லூரியில் கேண்டீன் நடத்தி வந்தார்கள் என்றால் சரிதான்.

8. எதிரியினுடைய தொழிலை முடக்க வேண்டும் என்ற எண்ணத்துடனும் அவர்களிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்துடனும் என் கணவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

G RUBANA
Digitally signed by G RUBANA
Date: 2023.04.25 17:43:20 +0530

**Signature of Witness** **நீதித்துறை நடுவர்**

**சூலூர்.**